# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)

**College with Potential for Excellence**
**Reaccredited (3rd cycle) with 'A' Grade by NAAC**
**(Affiliated to Bharathidasan University)**
**TIRUCHIRAPPALLI – 620 020.**

## PRESS RELEASE

**Date: 19/03/2018**

Jamal Mohamed College (Autonomous) celebrated its **67th College Day** for Men on **19/03/2018.**The celebrations began with prayer and College songs by the students. The Principal, Dr. S. Ismail Mohideen presided over the function and presented the annual report. The Chief Guest Mr. **A.V Venkatachalam IFS**, Additional Principal Chief Conservator of Forests and Director, Department of Environment, Government of Tamilnadu, delivered the 67th College day address. In his address, Mr A.V. Venkatachalam emphasized on the role of students in maintaining peace and order in the society as well as their family. He also insisted on the students to concentrate more on their goals rather than social media. Further, he stressed upon the duty of teachers in inculcating value based education and life skills for the betterment of the student community. The Secretary and Correspondent Dr. A.K. Khaja Nazeemudeen, the Treasurer Haji M.J. Jamal Mohamed and the Assistant Secretary Dr. K. Abdus Samad offered their felicitations. Gold Medals, Prizes and proficiency certificates were distributed to the University and College level toppers of various departments by the Chief Guest along with the Secretary & Correspondent, Treasurer and Assistant Secretary of the College Management Committee. The Additional Vice Principal Dr. M. Mohamed Sihabudeen and the Directors Dr. K.N. Abdul Khader Nihal, Dr. K.N. Mohamed Fazil and Professor M.A. Jamal Mohamed Yasin Zubeir organized the function in a grand manner. The Vice Principal Dr. A. Mohamed Ibraheem, proposed vote of thanks, which was followed by the cultural performances of the students.

**PRINCIPAL**

# ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)

நெ.7, ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி – 20.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**<u>பத்திரிகைச் செய்தி</u>** **நாள்:19.03.2018 (திங்கள்)**

திருச்சி ஜமால் முஹம்மது (தன்னாட்சி) கல்லூரியின் 67$^{வது}$ கல்லூரி நாள் விழா இன்று (19.03.2018) கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, தமிழ் நாடு சுற்றுச்சூழல் கூடுதல் வனபாதுகாப்பு முதன்மை தலைமை அலுவலர் மற்றும் இயக்குநரான திரு. ஏ.வி. வெங்கடாச்சலம்,**IFS,** அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், இன்றைய கல்லூரி இளைஞர்கள் சமுதாயத்திற்கும், பெற்றோருக்கும் தரவேண்டியது நிம்மதி மட்டுமே என்றார். மாணவர்கள் சமூக வலைதளங்களை விடுத்து, வாழ்வினை செம்மையாகவும் சிறப்பாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். அன்பான, அனுசரனையான உள்ளத்தை, ஆசிரியர்கள் மாணவர்களிடம் பதிய வைத்திட வேண்டும் என கேட்டுக்கொண்டார். கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன் மற்றும் பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது, இணை செயலாளர் முனைவர். கே. அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி அளவிலும், பல்கலைக்கழக அளவிலும், ஒவ்வொரு துறையிலும் முதலாவதாக வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களையும், நற்சான்றிதழ்களையும், பரிசுகளையும் சிறப்பு விருந்தினரோடு, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர், பொருளாளர் இணை செயலாளர் ஆகியோர் வழங்கினர். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் அனைவரையும் வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார். மாணவர்கள் ஒன்றிணைந்து கல்லூரிப் பாடலை பாடினர். விழாவில், கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் மற்றும் இயக்குநர்கள், பேராசிரியர்கள் அப்துல் காதர் நிஹால், முகமது ஃபாசில், ஜமால் முகமது யாசீன் ஜுபைர் உள்ளிட்ட குழுவினர் கல்லூரி நாள் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கலைநிகழ்ச்சிகளோடு நிறைவாக, துணை முதல்வர் முனைவர். முகமது இப்ராஹிம், நன்றியுரை வழங்கினார்.

முதல்வர்